DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: CC.19/2024**

Prosecution witness **PW.3 (LW.4)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Subramani | Caste | : | |
| Father Name | : | | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |
| Time | : | | | | |

**(A1 produced. A2 present. Accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **20.04.2026**

**20.04.2026 முதல் விசாரணை** :

1. நான் கேத்தி மைலானா ஜங்சன் பாரதி நகரில் குடியிருந்து எலக்ரிக்கல் வேலை செய்து வருகிறேன், அ.சா.1 பரத்குமார் எனது மகன் ஆவார். வழக்கின் விவரங்கள் எனக்கு தெரியும்.

2. 07.09.2023ம் தேதி எனது மனைவியின் தங்கையின் மகள் திருமணத்திற்காக திருப்பூர் செல்வதற்காக எனது மகனுக்கு சொந்தமான ஆர்.எக்ஸ் 100 இருசக்கர வாகனத்தை மைலானா ஜங்சன் பஸ் நிறுத்தத்திற்கு கொஞ்சம் முன்பாக எனது வீட்டிற்கு செல்லும் படிக்கட்டிற்கு அருகில் நிறுத்திவிட்டு பஸ்சில் திருப்பூர் சென்றோம். 15.09.2023ம் தேதி காலை எனது மகன் எங்களுக்கு முன்பாக ஊருக்கு சென்றுவிட்டார். சுமார் 1 மணி நேர இடைவெளியில் நானும் எனது மனைவியும் எங்கள் ஊருக்கு வந்தோம். அப்போது எனது மகன் போன் செய்து பதற்றமாக இருசக்கர வாகனத்தை காணவில்லை என்று கூறினார்.

3. பின்னிட்டு நாங்கள் அக்கம் பக்கம் தேடி பார்த்தோம். ஆனால் வாகனம் கிடைக்கவில்லை., அன்று மதியம் எனது மகன் கேத்தி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார். பின்னிட்டு போலிசார் அந்த வாகனத்தை

கண்டுபிடித்து கொடுத்தார்கள். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1. நாங்கள் வெளியூர் செல்லும் போது எப்போதும் அந்த இடத்தில் தான் இருசக்கர வாகனத்தை நிறுத்தி செல்வோம். பேருந்து நிறுத்தத்திற்கும் நாங்கள் இருசக்கர வாகனத்தை நிறுத்தி சென்ற இடத்திற்கும் இடையே சுமார் 50 மீட்டர் தூரம் இருக்கும். அந்த இடத்தில் நாங்கள் மட்டும் தான் இருசக்கர வாகனத்தை நிறுத்துவோம். எனது மகன் சொல்லித்தான் இருசக்கர வாகனம் காணாமல் போனது குறித்து எனக்கு தெரியும்.

2. புகார் கொடுப்பதற்காக நானும் எனது மகனுடன் காவல் நிலையம் சென்றிருந்தேன். போலிசார் கேட்டுக்கொண்டதன்படி எனது மகன் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

Thiru.R.Abdul Salam, B.A,B.L

Digitally signed by Thiru.R.Abdul Salam, B.A,B.L
Date: 2026.04.20 00:10:37 -0200

JUDICIAL MAGISTRATE,
COONOOR.